www.Padasalai.Net www.CBSEtips.in

# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2023

## பன்னிரெண்டாம் வகுப்பு

## பொருளியல்

பதிவு எண்: [ ]

நேரம்: 1.30 மணி மதிப்பெண்கள்: 50

பகுதி - அ

10×1=10

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

1. GST இதற்கு சமம்
   அ) விற்பனை வரி ஆ) தொழிற்குழும வரி இ) வருமான வரி ஈ) உள்ளாட்சி வரி
2. பொதுக்கடனைத் திரும்பச் செலுத்தும் முறை
   அ) கடனை மாற்றுதல் ஆ) மூழ்கும் நிதி
   இ) பகுதியாகச் செலுத்துதல் ஈ) இவை அனைத்தும்
3. நவீன அரசு எனப்படுவது
   அ) தலையிடா அரசு ஆ) மேல்மட்டத்தில் உள்ளவர்களின் அரசு
   இ) நலம் பேணும் அரசு ஈ) காவல் அரசு
4. வரி கீழ்காணும் குணங்களைக் கொண்டது
   அ) கட்டாயத் தன்மை ஆ) பிரதிபலன் கருதாமை
   இ) வரி மறுப்பு ஒரு குற்றம் ஈ) மேல் கூறப்பட்ட அனைத்தும்
5. சுற்றுச்சூழல் பொருட்கள் என்பவை ..............
   அ) சந்தைப் பொருட்கள் ஆ) சந்தையிடா பொருட்கள்
   இ) இரண்டும் ஈ) மேற்சொன்ன ஏதுவுமில்லை
6. மின்னணு கழிவுகள் .............. என்று பொதுவாக குறிப்பிடப்படுகின்றன.
   அ) திடக்கழிவுகள் ஆ) குப்பை கழிவுகள்
   இ) இ - கழிவுகள் ஈ) மருத்துவமனைக் கழிவுகள்
7. அமில மழை ................ விளைவுகளில் ஒன்று.
   அ) காற்று மாசு ஆ) நீர் மாசு இ) நில மாசு ஈ) ஒளி மாசு
8. எம்.என்.ராய் வழங்கியத் திட்டம் கீழ்கட்டவைகளில் எது?
   அ) காங்கிரஸ் திட்டம் ஆ) மக்கள் திட்டம்
   இ) பாம்பே திட்டம் ஈ) இவை எதுவுமில்லை
9. நீண்டகாலத் திட்டத்தின் மற்றொரு பெயர் ............
   அ) மேம்பாட்டுத் திட்டம் ஆ) மேம்பாடு இல்லாத திட்டம்
   இ) முன்னோக்குத் திட்டம் ஈ) முன்னோக்கமற்ற திட்டம்
10. சட்டப்பூர்வமாக நிதி ஆயோக்கின் தலைவராக கீழ்க்கண்ட எந்தப் பதவியில் உள்ள ஒருவர் செயல்படுவார்.
    அ) பிரதமர் ஆ) குடியரசுதலைவர்
    இ) உதவி குடியரசுதலைவர் ஈ) நிதி அமைச்சர்



www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



பகுதி - ஆ

II. எவையேனும் ஐந்து வினாவிற்கு விடையளி.
வினா எண் 18க்கு கட்டாயம் விடையளிக்கவும். 5×2=10

11. வரி கட்டணம் வேறுபடுத்துக.
12. GST யின் கூறுகள் எவை?
13. பூஜ்ய அடிப்படை வரவு செலவுத் திட்டம் குறிப்பு வரைக.
14. உலக வெப்பமயமாதல் என்பதனை வரையறு.
15. விதைப்பந்து என்பதன் பொருள் கூறுக.
16. ஒலிமாசுவினை கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளை கூறுக.
17. பொருளாதார திட்டமிடலின் வரைவிலக்கணம் எழுதுக.
18. பொருளாதார முன்னேற்றம் - வரையறு.

பகுதி - இ

III. எவையேனும் ஐந்து வினாவிற்கும் விடையளி.
வினா எண் 26க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 5×3=15

19. வரிவிதிப்பு விதிகளை விவரிக்க.
20. நவீன அரசின் பணிகள் யாவை? (ஏதேனும் மூன்று)
21. நேர்முக மற்றும் மறைமுக வரிகளுக்கிடையேயான மூன்று வேறுபாடுகளைக் கூறுக.
22. நிலமாசு என்றால் என்ன? அதற்கான காரணங்களைக் குறிப்பிடுக.
23. இ - கழிவுகள் என்பதன் பொருள் தருக.
24. நீர் மாசுக்கான காரணங்கள் யாவை?
25. வறுமையின் நச்சு சுழற்சிக்கான காரணங்களை வரைபடத்துடன் தெளிவுபடுத்துக.
26. நிதி ஆயோக்கின் பணிகள் எவை?

பகுதி - ஈ

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 3×5=15

27. அ) பொது நிதியின் எல்லைகளை விளக்குக.

(அல்லது)

ஆ) கூட்டாட்சி நிதியின் கொள்கைகளை விளக்குக.

28. அ) நீடித்த அல்லது வளம் குன்றா வளர்ச்சி முக்கியத்துவம் மற்றும் அதன் நோக்கங்களை விளக்குக.

(அல்லது)

ஆ) அரசுச் செலவு அதிகரிப்புகளுக்கான காரணங்கள் யாவை?

29. அ) பல்வேறு வகையானத் திட்டமிடல் வகைகளை விளக்குக.

(அல்லது)

ஆ) குறிப்பு வரைக : அ) பருவநிலைமாற்றம் ஆ) அமிலமழை

★★★ / ★★★



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## இரண்டாம் இடைப்பருவ தேர்வு 2023

## 12ஆம் வகுப்பு பொருளியல்

1) அ விற்பனை வரி

2) ஈ இவை அனைத்தும்

3) இ நலம் பேணும் அரசு

4) ஈ மேல் கூறப்பட்ட அனைத்தும்

5) ஆ சந்தை டா பொருட்கள்

6) இ இ- கழிவுகள்

7) அ காற்று மாசு

8) ஆ மக்கள் திட்டம்

9) இ முன்னோக்கு திட்டம்

10) அ பிரதமர்

### பகுதி ஆ

11) வரி கட்டணம் வேறுபடுத்துக?

வரி என்பது எவ்வித பிரதிபலனையும் எதிர்பாராமல் அரசிற்கு கட்டாயமாக செலுத்தக் கூடியதாகும் கட்டணம் என்பது கட்டாயமாக செலுத்தக்கூடியது அல்ல அரசனது சில சேவைகளை செய்வதற்காக வசூலிப்பதே கட்டணமாகும் எடுத்துக்காட்டாக ஓட்டுநர் உரிமம் வழங்குவதற்காக வசூலிப்பது கட்டணம் ஆகும்

12) ஜி எஸ் டி யின் கூறுகள் யாவை?

1 CGST

2 SGST

3 IGST

13) பூஜ்ஜிய அடிப்படை வரவு செலவு திட்டம் குறிப்பு வரைக?

இதில் ஒவ்வொரு செலவினமும் புதியதாக கருதப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் மதிப்பீடுகள் செய்யப்படும் இந்திய அரசு 1987 88 ல் இந்த திட்டத்தை தாக்கல் செய்தது

14) உலக வெப்பமயமாதல் என்பதனை வரையறு?

பசுமை இல்ல வாயுக்கள் காரணமாக உலகின் சராசரி வெப்பநிலை அதிகரித்து வருவது உலக வெப்பமயமாதல் எனப்படுகிறது

www.Padasalai.Net

15) விதைப்பந்து என்பதன் பொருள் கூறுக?

ஒரு விதை மண்ணால் மூடி வைக்கப்படுகிறது அந்த மண் உரம் கலந்த களிமண்ணாகும் பிறகு உலர்த்தப்படுகிறது பின்பு எங்கு வேண்டுமோ அங்கு அதனை விதைக்கலாம்

16) ஒலி மாசு வினை கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளை கூறுக?

ஒலி தடைகளை ஏற்படுத்துதல் வேலை செய்யும் இடங்களில் ஒலி தடுப்பணை நிறுவுதல் போக்குவரத்து நெரிசல் கட்டுப்படுத்துதல் ஒளிபெருக்கிகளை கட்டுப்படுத்துதல்

17) பொருளாதார திட்டமிடலின் வரைவிலக்கணம் எழுதுக?

பொருளாதார திட்டமிடல் என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட இலக்குகளை அடைய உரிய பொறுப்பில் உள்ளவர்கள் நிதானமாக சிந்தித்து இருக்கக்கூடிய பொருளாதார வளங்களை அதிக அளவில் பயன்படுத்த சுட்டிக்காட்டும் வழிமுறைகளே ஆகும் டால்டன்

18) பொருளாதாரம் முன்னேற்றம் வரையறு)

மைக்கேல் பி டொடரோவின் கருத்துப்படி முன்னேற்றத்தை சமூக அமைப்பு பொதுமக்களின் மனநிலை மற்றும் நாட்டின் நிறுவன அமைப்புகள் ஆகியவற்றில் நிகழும் பெரிய மாற்றங்கள் மற்றும் விரைவான வளர்ச்சி வருவாய் ஏற்றத்தாழ்வினை குறைத்தல் மற்றும் வறுமை ஒழிப்பு ஆகிய அனைத்தையுமே பொருளாதாரம் முன்னேற்றமாக கருத வேண்டும் என்கிறார்

## பகுதி இ

19) வரிவிதிப்பு விதிகளை விவரிக்க?

வரி என்பது எவ்வித நன்மையும் எதிர்பாராமல் அரசுக்கு கட்டாயமாக செலுத்துவதாகும் ஒன்று 1.செலுத்தும் திறன் பற்றிய விதி. ஒருவன் தன் வரி தாங்கு திறனுக்கு ஏற்ப வரி செலுத்துவது ஏழைக்கு குறைவாகவும் பணக்காரர்களுக்கு அதிகமாகவும் விதிப்பது 2.நிச்சயத்தன்மை விதி குடிமகன் செலுத்த வேண்டிய வரியின் அளவு எப்பொழுது யாரிடம் செலுத்த வேண்டும் என்பதை அறிந்திருக்க வேண்டும்

3. வசதி விதி வரி செலுத்துதல் வசதியாகவும் சுமை இல்லாததாகவும் இருத்தல் வேண்டும் எடுத்துக்காட்டு வருமான வரி சம்பளத்தில் பிடித்தம்

4. சிக்கன விதி வரி விதிப்பிலும் வசூலிப்பதிலும் அதிக பணம் வீணாகாமல் இருக்க வேண்டும்

20) நவீன அரசின் பணிகள் யாவை ஏதேனும் மூன்று?

சமூக நலன் பாதுகாப்பு நீதி நிறுவனங்கள்

www.Padasalai.Net

21) நேர்முக மற்றும் மறைமுக வரிகளுக்கிடையேயான மூன்று வேறுபாடுகளை கூறுக?

1.நேர்முக வரி என்பது ஒரு நபரின் வருமானம் மற்றும் செல்வத்தின் மீது விதிக்கப்பட்டு நேரடியாக அரசுக்கு செலுத்துவதாகும்2. வளர் வீதம்3. ஒரே நபர் மீது விடுகிறது

மறைமுக வரி

1.மறைமுக வரி என்பது ஒருவர் நுகரும் பண்டங்கள் மற்றும் பணிகள் மீது விதிக்கப்பட்டு மறைமுகமாக அரசுக்கு செலுத்தப்படுவதாகும்

2. தேய்வீதம்

3. பல்வேறு நபர்கள் மீது விழுகிறது

22) நிலம் மாசு என்றால் என்ன அதற்கான காரணங்களை குறிப்பிடுக?

திட திரவ மற்றும் வாயு வடிவிலான கழிவுகளை நிலத்தில் கொட்டுவதால் அதன் தன்மை குறிப்பிடத் தகுந்த அளவுக்கு பாதிக்கப்பட்டு நிலம், நிலத்தடி நீர் தாவரங்கள் மற்றும் உயிரினங்கள் மீது பாதிப்பை ஏற்படுத்தும் நிலையை நிலமாசு என்கிறோம்

23) ஈ கழிவுகள் என்பதன் பொருள் தருக?

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில் இகழிவுகள் என்று பொதுவாக அழைக்கப்படும் மின்னணு கழிவுகள் ஏற்படுகின்றன மின்னணு சாதன பொருட்களை கழிக்கும்போதோ அல்லது மறுசுழற்சி செய்யும்போதோ இக்கழிவுகள் தோன்றும் உதாரணமாக குளிர்சாதன பெட்டிகள் காற்று சீர் அமைப்புகள் கைப்பேசிகள் கணினிகள்

24) நீர் மாசுக்கான காரணங்கள் யாவை?

கழிவுநீர் மற்றும் தேவையற்ற நீர் வெளியேற்றம் திடக்கழிவுகள் குவிதல் ஆளை கழிவுகளை கொட்டுதல் எண்ணெய் சிந்துதல் அமில மழை புவி வெப்பமடைதல் நீர் நிலைகளில் பிராண வாய்வு குறைதல்

25) வறுமையின் நச்சு சுழற்சி காண காரணங்களை வரைபடத்துடன் தெளிவுபடுத்துக?

அழைப்பின் பக்கத்தில் குறைவான உண்மை வருமானம் காரணமாக சேமிப்பு அளவு குறைகிறது இது மூலதன பற்றாக்குறையை உருவாக்குகிறது இதனால் உற்பத்தித்திறன் குறைந்து வருமானமும் குறைகிறது தேவை பக்கத்தில் குறைவான உண்மை வருமானம் காரணமாக தேவையும் குறைவாக இருக்கும் இது முதலீட்டை குறைக்க செய்யும் இதனால் மூலதன பற்றாக்குறை ஏற்பட்டு உற்பத்தி குறைந்து வருமானத்தை குறைக்கும்

26) நிதி ஆயோக்கின் பணிகள் யாவை?

www.Padasalai.Net

கூட்டுறவு மற்றும் கூட்டாட்சி நாட்டின் நிகழ்வுகளில் மாநிலங்களை பங்கெடுக்க செய்தல் பரவலாக்கப்பட்ட திட்டமிடல் தொலைநோக்கு திட்டமிடல் சச்சரவை தீர்த்தல் நிபுணர்களின் கூட்டமைப்பை உருவாக்குதல்

## பகுதி ஈ

27) பொது நிதியின் எல்லைகளை விளக்குக?

வரைவிலக்கணம் அரசின் வருவாய் மற்றும் செலவுகளின் இயல்புகளையும் கொள்கைகளையும் ஆராய்வது பொது நிதியில் ஆகும் ஆடம் ஸ்மித் பொது நிதியின் எல்லை பொது வருவாய் பொது வருவாய் என்பது வரி மற்றும் வரியில்லா வருமானங்கள் பற்றியும் அவற்றின் விளைவுகள் பற்றியும் விளக்குகிறது பொதுச் செலவு பொதுச் செலவு என்பது அரசின் செலவு பொதுச் செலவில் விளைவுகள் மற்றும் கட்டுப்படுத்துதல் ஆகியவற்றையும் விளக்குகிறது பொது கடன் பொதுக் கடன் என்பது அரசின் கடன் இதில் புது கடன்களின் சுமை அதன் விளைவுகள் மற்றும் திரும்ப செலுத்தும் முறை பற்றி விளக்குகிறது நிதி நிர்வாகம் அரசின் வரவு செலவுத் திட்டத்தின் பல்வேறு பகுதிகளை பற்றி விளக்குகிறது வரவு செலவுத் திட்டத்தின் நிதி ஒதுக்கீடு மதிப்பீடு மற்றும் தணிக்கை போன்றவைகள் நிதி நிர்வாகத்தின் கீழ் வருகிறது நிதிக் கொள்கை வரிகள் மானியங்கள் பொதுக்கடன் மற்றும் பொதுச் செலவு ஆகியவைகள் நிதி கொள்கையின் கருவிகள் ஆகும்

www.Padasalai.Net

27) ஆ கூட்டாட்சி நிதியின் கொள்கைகளை விளக்குக?

சுதந்திரம் சமத்துவம் ஒரே மாதிரியான தன்மை போதுமான வளங்களை பெற்றிருத்தல் நிதி வசதி ஒருங்கிணைத்தல் மற்றும் ஒன்றுபடுதல் செயல் திறன்

28) நீடித்த அல்லது வளம் குன்றா வளர்ச்சி முக்கியத்துவம் மற்றும் அதன் நோக்கங்களை விளக்குக?

வறுமையை ஒழித்தல் பட்டினியை முடிவுக்கு கொண்டு வருதல் நலமான வாழ்வை உறுதிப்படுத்துதல் தரமான கல்வியை வழங்குதல் பெண்களுக்கு அதிகாரம் வழங்குதல் குடிநீரும் சுகாதாரமும் அனைவருக்கும் உறுதிப்படுத்துதல் அனைவருக்கும் தரமான வேலைவாய்ப்பினை வழங்குதல் நீடித்த நிலையான பொருளாதார வளர்ச்சி நிலை வழங்குதல் தேவையான கட்டமைப்புகளை வழங்குதல் தொழில் மயமாக்கல் புத்தாக்கங்களை ஊக்குவித்தல்

28) ஆ அரசு செலவு அதிகரிப்பதற்கான காரணங்கள் யாவை?

மக்கள் தொகை வளர்ச்சி பாதுகாப்பு செலவு அரசு மானியங்கள் கடன் சேவைகள் நகரமயமாக்கல் தொழில்மயமாக்கல்

29) பல்வேறு வகையான திட்டமிடல் வகைகளை விளக்குக?

மக்களாட்சி திட்டமிடுதல் மற்றும் சர்வாதிகார திட்டமிடுதல் மையப்படுத்தப்பட்ட திட்டமிடுதல் மற்றும் பரவலாக்கப்பட்ட திட்டமிடுதல் வழிகாட்டும் திட்டமிடுதல் மற்றும் தூண்டும் திட்டமிடுதல் சுட்டிக்காட்டும் திட்டமிடுதல் மற்றும் கட்டாயமான திட்டமிடுதல் விரிவான மற்றும் பகுதி திட்டமிடுதல்

29) ஆ குறிப்பு வரைக பருவநிலை மாற்றம் அமில மழை?

பருவநிலை மாற்றம் வெப்பநிலை மழைப்பொழிவு காற்று வீசுதல் ஆகியவற்றின் அளவுகளிலும் அவைகள் நிலவும் காலங்களிலும் ஏற்படும் குறிப்பிடத் தகுந்த மாற்றம் பருவநிலை மாற்றம் எனப்படுகிறது

அமில மழை சல்பர் டை ஆக்சைடு நைட்ரஜன் ஆக்சைடு வளிமண்டலத்தில் நீருடன் வினைபுரிந்து பூமிக்கு மழை மற்றும் பணிபுரிவாக பூமிக்கு திரும்புவதை குறிப்பது அமில மழையாகும்.

**Answer key Prepared by**

சி சுதாகர் முதுகலை ஆசிரியர் பொருளியல் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி ஊதூர்

கே சுதாகர் முதுகலை ஆசிரியர் பொருளியல் அரசினர் மேல்நிலைப்பள்ளி பணமடங்கி

www.Padasalai.Net